# மரபுத்தொடர்

- ஒரு சொல் அல்லது சொற்றொடர், அதன் நேர்பொருளை உணர்த்தாமல் தொடரும் பயன்பாட்டில் வழிவழியாக வேறு குறிப்புப் பொருளினைத் தந்து நிற்கும்போது அவற்றை மரபுத்தொடர் என்பர்.
- இது, மொழி மரபு, மொழி வழக்கு, இலக்கணைத் தொடர் என்றும் அழைக்கப்படுகிறது.

## புதிய பள்ளி பாடப்புத்தகத்திலுள்ள மரபு தொடர்கள் :

1) எட்டாக்கனி – அடைய முடியாத ஒன்று
2) உடும்பு பிடி – உறுதியாக இருத்தல்
3) கிணற்றுத்தவளை – வெளியுலகம் அறியாதிருத்தல்
4) ஆகாயத்தாமரை – இல்லாத ஒன்று
5) எடுப்பார் கைப்பிள்ளை – சுய சிந்தனையின்றி செயல்படுபவர்
6) மேளதாளத்துடன் – சந்தோஷம்
7) கொடிகட்டி பறத்தல் – புகழ்பெற்று விளங்குதல்
8) ஆயிரங்காலத்து பயிர் – நீண்டகாலமாக இருப்பது
9) கல்லில் நார் உரித்தல் – இயலாத செயல்
10) கம்பி நீட்டுதல் – விரைந்து வெளியேறுதல்
11) கானல் நீர் – மாயத் தோற்றம்
12) கண்ணை மூடிக்கொண்டு – ஆராய்ந்து பாராமல்
13) எதிர்நீச்சல் – போராடி வெல்லுதல்
14) சொந்தக்காலில் நிற்றல் – சொந்த உழைப்பில் முன்னேறுதல்
15) தாளம் போடுதல் – துன்பப்படுதல்
16) மதில்மேல் பூனை – முடிவெடுக்க முடியாத நிலை
17) நிறைகுடம் – அறிவிலும் பண்பிலும் சிறந்தவர் (அடக்கமானவர்)
18) கை தூக்கி விடுதல் – உதவி செய்தல்
19) கண்ணாயிருத்தல் – காவலாயிருத்தல்
20) அவசரக்குடுக்கை – எண்ணிச் செயல்படாமை
21) முதலைக்கண்ணீர் – பொய்யழுகை
22) கானல் நீர் – மாயத் தோற்றம்
23) ஆற அமர – மெதுவாக / நிதானமாக
24) ஆணி அடித்தாற்போல் – நிலையாக நிற்றல்
25) அகலக்கால் – விளைவுகளைச் சிந்திக்காமல் செயல்படுவது
26) வழிவழியாக – பரம்பரை பரம்பரையாக
27) கண்துடைப்பு – ஏமாற்றுதல்
28) குரங்கின் கை பூமாலை – வீணடித்தல்
29) பசுத்தோல் போர்த்திய புலி – நயவஞ்சகம்
30) கரி பூசுதல் – அவமானப்படுத்துதல்

## பழைய பாடபுத்தகத்திலுள்ள மரபு தொடர்கள்

1) தலையில் வைத்து கொண்டாடு – அளவு கடந்து பாராட்டுதல்
2) முகத்தில் அறைந்தாற்போல் – எடுத்தெறிந்து பேசுதல்
3) கண்ணை உறுத்துகிறது – பொறாமை
4) காதில் பூச்சுற்றுதல் – ஏமாற்றுதல்

5) மூக்கறுபட்டுப்போனான் – அவமானப்படுதல்
6) வாய் நீளம் காட்டாதே – அளவுக்கதிகமாக பேசுவது
7) இரட்டை நாக்கு பேர்வழி – மாற்றி மாற்றி பேசுபவர்கள்
8) பல்லை கடித்துக்கொண்டு – பொறுத்து கொண்டு இருத்தல்
9) முதுகில் குத்தி விட்டான் – துரோகம்
10) காலில் வெந்நீர் ஊற்றிக்கொண்டு நிற்கிறான் – அவசரப்படுதல்
11) கை வந்த கலை – திறமை
12) அத்தி பூத்தாற் போல – அரிதாக, அதிசயமாக
13) உள்ளங்கை நெல்லிக்கனி – வெளிப்படைத்தன்மை
14) தாளம் போடுதல் – துன்பப்படுதல்
15) கயிறு திரித்தல் – இல்லாததனை சொல்லுதல்
16) கொடிகட்டி பறந்தார் – தனிப்புகழோடு வாழ்ந்தார்
17) முதலை கண்ணீர் – பொய்யாக அழுதல் / ஏமாற்றுதல்
18) ஆணை வந்துவிட்டது – வேலை கிடைத்துவிட்டது
19) கண்ணுங்கருத்துமாக – மிகுந்த அக்கறை
20) தங்குதடையின்றி – அளவின்றி ஏராளமாக
21) பழக்கவழக்கம் – பின்பற்றும் நடைமுறைகள்/ வழக்கங்கள்/ நம்பிக்கைகள்
22) தொன்றுதொட்டு – பழமை
23) ஊணுறக்கமின்றி – ஓய்வின்றி உழைத்தல்
24) அல்லும்பகலும் – எப்பொழுதும்
25) பேரும்புகழும் – பெரும் புகழ் பெற்று விளங்குதல்
26) மேடும்பள்ளமும் – ஏற்ற இறக்கம்
27) ஆயிரங்காலத்து பயிர் – நீண்ட காலத்திற்குரியது
28) எடுப்பார் கைப்பிள்ளை – தன் சிந்தனையின்றி சொல்பவர் பேச்சை கேட்டு நடப்பவர்
29) ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது – பட்டறிவில்லாத படிப்பறிவு
30) அவலை நினைத்து உரலை இடித்தல் – எண்ணமும் செயலும் ஒத்துவராமை
31) முதலை கண்ணீர் – பொய்யழுகை
32) அவசரக்குடுக்கை – எண்ணித் துணியாதார்
33) ஆகாயத்தாமரை – இல்லாத ஒன்று
34) கம்பி நீட்டல் – சொல்லிக்கொள்ளாமல் செல்லல்
35) தாளம் போடுதல் – எதை சொன்னாலும் அப்படியே செய்தல்
36) கானல் நீர் – இருப்பது போல் தோன்றும் ஆனால் இராதது
37) பஞ்சாய் பறத்தல் – அலைந்து திரிதல்
38) குட்டிச்சுவர் – பயனின்றி இருத்தல்
39) கொட்டியளத்தல் – மிகுதியாக பேசுதல்

## மேலும் அறிந்து கொள்வோம்

- உதட்டளவு – மனதார இல்லாமல்
- ஏட்டிக்குப் போட்டி – எதிர்த்துப் பேசுதல்
- ஒரு கை பார்த்தல் – சவால்/ திறமையைக் காட்டுதல்
- ஒளிவுமறைவு – மறைத்து
- ஓட்டைக் கை – செலவாளி

- ஓட்டைவாய் – ரகசியத்தைக் காப்பாற்றாமை
- கண்மூடித்தனம் – அறியாமை/ சிந்திக்காமல் செயல்படுதல்
- கரைத்துக் குடித்தல் – அனைத்தையும் நன்றாக அறிதல்
- குரங்குப்பிடி – பிடிவாதம்
- கை கழுவுதல் – விட்டு விடுதல் / ஒதுக்கி விடுதல்
- கையுங்களவுமாக – தவறு செய்த இடத்திலேயே அகப்படுதல்
- சிட்டாய்ப் பறத்தல் – விரைவாகச் செல்லுதல்
- செவி சாய்த்தல் – கவனமாகக் கேட்டல்
- தட்டிக் கேட்டல் – கண்டித்தல்
- தட்டிக் கொடுத்தல் – பாராட்டுதல்
- தட்டிப் பறித்தல் – அபகரித்தல்
- பம்பரமாகச் சுழலுதல் – விரைவாகச் செய்தல்
- புத்தகப்புழு – எப்போதும் படித்துக் கொண்டிருத்தல்
- அளவளாவுதல் – பேசுதல்
- கட்டுக்கதை – பொய்க்கதை
- காலில் விழுதல் – மன்னிப்புக் கேட்டல் / ஆசி பெறுதல்
- பகற்கனவு – கற்பனை செய்தல்
- பல்லைக் காட்டுதல் – தவற்றைச் சிரித்துச் சமாளித்தல்
- பாட்டு வாங்குதல் – திட்டு வாங்குதல்
- பிடி கொடுத்தல் – சந்தர்ப்பம் அளித்தல்
- வாலாட்டுதல் – குறும்புத்தனம் செய்தல்
- ஆணித்தரம் – உறுதியாக
- ஆறப் போடுதல் – தள்ளிப்போடுதல்
- ஈடுகட்டுதல் – சரி செய்தல்
- உரித்து வைத்தல் – ஒரே மாதிரி இருத்தல்
- ஓட்டம் பிடித்தல் – தப்பித்தல்
- ஓய்வு ஒழிச்சலின்றி – ஒய்வின்றி / தொடர்ந்து வேலை செய்தல்
- கதை கட்டுதல் – இல்லாததைச் சொல்லுதல்
- காக்கை பிடித்தல் – காரியம் சாதிக்க இனிமையாகப் பேசுதல்
- குருட்டுப் பாடம் – புரியாமல் மனனம் செய்தல்
- தட்டிக் கழித்தல் – பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமை
- தூக்கிவாரிப் போடுதல் – அதிர்ச்சியடைதல்
- மனக்கோட்டை கட்டுதல் – கற்பனை செய்தல்
- வயிற்றிலடித்தல் – பிழைப்பைக் கெடுத்தல்
- அள்ளியிறைத்தல் – அதிகமாக செலவு செய்தல்
- இழுத்தடித்தல் – நேரம் கடத்துதல்
- எடுத்த எடுப்பில் – தொடக்கத்தில்
- ஒத்துப் பாடுதல் – ஏற்றுக் கொள்ளுதல்
- ஒற்றைக் காலில் நிற்றல் – பிடிவாதமாக இருத்தல்
- காது குத்துதல் – ஏமாற்றுதல்
- கையைக் கடித்தல் – நஷ்டமடைதல்
- ஒருமுகமாக – கவனமாக
- கிள்ளுக்கீரை – எளிமையாக கையாளக்கூடிய
- வயிற்றில் புளியைக் கரைத்தல் – பயப்படுதல்
- இடித்துரைத்தல் – கண்டித்து அறிவுரை கூறுதல்

- உச்சி குளிர்தல் – மகிழ்ச்சியடைதல்
- தலையாட்டிப் பொம்மை – ஒத்துப்பாடுதல்
- முயற்கொம்பு – இல்லாத ஒன்று
- வாய்ப்பந்தல் – ஆடம்பரப் பேச்சு